பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
27 06 2025 **FRIDAY** 6 30 **PM**
வணக்கம்-மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சிறு குறு தொழில்களின் வளர்ச்சி நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

- தமிழகத்திற்கு காவிரியில் அடுத்த மாதம் 31 டிஎம்சி தண்ணீரை கர்நாடகா திறந்துவிட வேண்டும் என்று காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

- தமிழகத்தில் பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான பொதுப்பிரிவு கலந்தாய்வு அடுத்த மாதம் 14ஆம் தேதி தொடங்குகிறது.

- பிஜேபி – அஇஅதிமுக கூட்டணி குறித்து மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா பேசியது குறித்து திமுக மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்து வருவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

- இந்தியா மாஸ்டர்ஸ் ஹாக்கி போட்டியில் தமிழக அணி முதலிடத்தை பிடித்து கோப்பையை கைப்பற்றியது.

>>>>>>>>>><<<<<<<<<<

சிறு குறு நடுத்தர தொழில் கட்டமைப்பின் வளர்ச்சி நாட்டின் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற சர்வதேச சிறு குறு நடுத்தர தொழில்கள் தினத்தை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட குடியரசுத்தலைவர், நாட்டின் பொருளாதாரத்தை தாங்கிப் பிடிக்கும் தூண்களாக சிறுதொழில்கள் அமைந்துள்ளதாக கூறினார்.

நாட்டின் உள்நாட்டு உற்பத்தியில் 30 சதவீதமும், உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதியில் 45 சதவீதமும் சிறுதொழில்களின் பங்கு உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமின்றி, கிராமப்புற அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தவும் இந்த தொழில்கள் பெரிதும் உதவிடுவதாக அவர் தெரிவித்தார்.

கிராமப்புற வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், நலிவுற்ற மக்களின் பொருளாதார அதிகாரத்தை சிறுதொழில்கள் உறுதி செய்வதாகவும் குடியரசுத் தலைவர் கூறினார்.

வேளாண் தொழிலுக்குப் பிறகு இரண்டாவது பெரிய வேலைவாய்ப்பு வழங்கும் கட்டமைப்பாக சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டிற்கு மட்டுமின்றி உலகின் பொருளாதாரத்திற்கு வலுசேர்க்கும் முதுகெலும்பாகவும் சிறுதொழில்கள் உள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த துறையில் அதிக அளவில் புதிய தொழில் முனைவோர் உருவாக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.

>>>>>>>>><<<<<<<<<<

தமிழகத்திற்கு காவிரியில் அடுத்த மாதம் 31 புள்ளி இரண்டு நான்கு டிஎம்சி தண்ணீரை கர்நாடகா திறந்து விட வேண்டும் என்று காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

ஆணையத்தின் தலைவர் திரு. எஸ்.கே. ஹல்தர் தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்ற 41வது ஆய்வுக் கூட்டத்தில், எவ்வித தடையும் இன்றி தொடர்ந்து தண்ணீர் திறந்துவிடப்படுவதை கர்நாடகா உறுதி செய்ய வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

காணொலி வாயிலாக நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரியின் நீர்வளத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

>>>>>>>>><<<<<<<<<<

இலக்கியத்தின் வாயிலாக இந்தியர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் மகத்தான பணியை சாகித்ய அகாடமி மேற்கொண்டு வருவதாக  முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் நூற்றாண்டை ஒட்டி, சாகித்ய அகாடமியும், ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழக தமிழ் துறையும் இணைந்து சென்னையில் நடத்திய கருத்தரங்கை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

ஒருவரின் இலக்கியத் தகுதியை நிர்ணயிப்பதற்கு சாகித்ய அகாடமி விருதை அளவுகோலாக நிர்ணயிக்கும் அளவுக்கு அந்த அமைப்பு சிறப்புடன் செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

எழுத்தாளர்களையும், மொழிபெயர்ப்பாளர்களையும் ஊக்குவிக்கும் சாகித்ய அகாடமியின் பணி மகத்தானது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று ஜவஹர்லால் பல்கலைக் கழகமும் கருத்தாழமிக்க உரையாடல்களுக்கு சிறந்த மையமாக திகழ்வதுடன், அந்த பல்கலைக் கழகத்தின் ஆய்வுகள் உலக அளவில் பேசப்படுவதாகவும் திரு. மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டார்.

>>>>>>>>><<<<<<<<<<

தமிழகத்தில் பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான பொதுப்பிரிவு கலந்தாய்வு அடுத்த மாதம் 14ஆம் தேதி தொடங்கும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று பொறியியல் கலந்தாய்வுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஆண்டு 145 மாணவர்கள் 200க்கு 200 மதிப்பெண் பெற்றுள்ளதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - கோவி செழியன் 36 செகண்ட்ஸ்)

சிறப்புப் பிரிவினருக்கான கலந்தாய்வு அடுத்த மாதம் 7ஆம் தேதி தொடங்கும் என்று கூறிய திரு. கோவி. செழியன், அரசு பள்ளி மாணவர்களுக்கான 7 புள்ளி ஐந்து சதவீத ஒதுக்கீட்டின் கீழ், மாணவர் சேர்க்கை பெறுவதற்கு 47 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

>>>>>>>>><<<<<<<<<<

தொடக்கப் பள்ளிகளில் எல்.கே.ஜி, யுகே.ஜி வகுப்புகளை அறிமுகப்படுத்துவது குறித்து மாநில அரசு ஆய்வு செய்யும் என்று பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், பள்ளிக்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

அறிவுசார்ந்த சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஆசிரியர்கள் ஈடுபட வேண்டும் என்றும் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி கேட்டுக் கொண்டார்.

>>>>>>>>><<<<<<<<<<

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி குறித்து மத்திய அமைச்சர் திரு. அமித் ஷாவும், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமியும் கலந்து பேசிய முடிவெடுப்பார்கள் என்று தமிழக பிஜேபி தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிஜேபி- அஇஅதிமுக கூட்டணி பற்றி திரு. அமித் ஷா பேசியது குறித்து, திமுக மாறுபட்ட கருத்துக்களை மக்களிடம் தெரிவித்து வருவதாக குற்றம் சாட்டினார்.

அந்தக் கட்சிக்கு தேர்தல் தோல்வி பயம் வந்துவிட்டதாகவும் அவர் கூறினார்.

மதுரையில் நடைபெற்ற முருக பக்தர்கள் மாநாடு உள்ளிட்ட ஆன்மிக நிகழ்ச்சிகளை பிஜேபி ஒருபோதும் வாக்குக்காக பயன்படுத்தவில்லை என்றும், அதேசமயம் திமுக ஆன்மிக நிகழ்ச்சிகளை அரசியலாக்கி, ஆதாயம் தேட முற்படுவதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

>>>>>>>>><<<<<<<<<<

மத்திய அரசின் அடல் ஓய்வூதிய திட்டம், வேலூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

18 வயது முதல் 40 வயது வரை உள்ளவர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதுவரை வேலூர் மாவட்டத்தில் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இத்திட்டத்தில் இணைந்துள்ளனர்.

இத்திட்டத்தின் பயன்கள் தங்களது முதுமைக் காலத்தில் பேருதவியாக இருக்கும் என்று பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 44 செகண்ட்ஸ்)

>>>>>>>>><<<<<<<<<<

தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் அடுத்த 2 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், கோவை, நீலகிரி மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவித்தார்.

>>>>>>>>><<<<<<<<<<

மாவட்டச் செய்திகள்

நாமக்கல் மாவட்ட புதிய ஆட்சியராக திருமதி. துர்கா மூர்த்தியும், சிவகங்கை ஆட்சியராக திருமதி. பொற்கொடியும், பெரம்பலூர் ஆட்சியராக திரு. அருண் ராஜும், ஈரோடு ஆட்சியராக திரு. ச. கந்தசாமியும் இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

>>>>>>>>><<<<<<<<<<

விருதுநகரில் உள்ள 600 ஆண்டுகள் பழமைவாய்ந்த அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>>>>>><<<<<<<<<<

நாட்டின் இரண்டாவது பீல்டு மார்ஷல் ஷாம் மானெக்ஷாவின் நினைவு தினத்தை ஒட்டி, உதகையில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் வெலிங்டன் ராணுவ கல்லூரி மற்றும் ராணுவ மையத்தின் அதிகாரிகள் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

>>>>>>>>><<<<<<<<<<

அரியலூரில் நடைபெற்ற போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஏராளமானோர் பங்கேற்று போதைப்பொருள் பழக்கத்தால் ஏற்படும் தீமைகளை விளக்கி கூறினர்.

>>>>>>>>><<<<<<<<<<

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் குறைதீர்ப்பு முகாம் மதுரையில் இன்று நடைபெற்றது.

>>>>>>>>><<<<<<<<<<

வேளாண் பொறியியல் துறை சார்பில் நவீன வேளாண் எந்திரங்களின் பயன்பாடு மற்றும் பராமரிப்பு குறித்த சிறப்பு முகாம் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

>>>>>>>>><<<<<<<<<<

இண்டியா மாஸ்டர்ஸ் ஹாக்கி போட்டியில் தமிழக அணி முதலிடத்தை பிடித்து கோப்பையை கைப்பற்றியது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் மஹாராஷ்ட்ரா 2வது இடத்தையும், சண்டிகர் 3வது இடத்தையும் பிடித்தன.

மகளிர் பிரிவில் ஒடிசா அணி முதலிடத்தையும், பஞ்சாப் 2வது இடத்தையும், ஹரியானா 3வது இடத்தையும் பிடித்தன.

>>>>>>>>><<<<<<<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற 175 ரன் என்ற இலக்கை இங்கிலாந்து நிர்ணயித்துள்ளது.

Hove-வில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் விளையாடிய இங்கிலாந்து அணி 42 புள்ளி இரண்டு ஓவரில் 174 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

>>>>>>>>>END<<<<<<<<<